DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Cr.P.C/XXV BNSS)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, KUMBAKONAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No.237/2020 |
| Deposition of witness | : | PW-4 AW11 |
| Name | : | பாஸ்கர் |
| Father's /Husband Name | : | முருகன் |
| Village | : | கும்பகோணம் |
| Taluk | : | கும்பகோணம் |
| Age | : | 46 |
| Occupation | : | சிறப்பு உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 16th day September 2025.
A1 to A3 Accused present. App and defense counsel present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது மேற்கு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். அதே காவல் நிலையத்தில் பணிபுரியும் கண்ணன் அவர்களையும் பணிபுரிந்த சிறப்பு உதவி ஆய்வாளர் மனோகரன் அவர்களையும் எனக்கு தெரியும். அவர்களது கையொப்பம் மற்றும் கையெழுத்து எனக்கு நன்கு தெரியும். இவ்வழக்கின் முக்கியசாட்சிகள் அரசு தரப்பு சாட்சிகளுக்கு எதிராக சாட்சியம் அளித்தாலும் காலதாமதம் மற்றும் நீதியின் நலன் கருதி சட்டப்பிரிவுகள் 311 Crpc மற்றும் பிரிவு 348 BNSS இன் படி மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டததின்பேரில் நான் கூடுதல் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 02.02.2020ம் தேதி காலை 11.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் கண்ணன் அவர்கள் கும்பகோணம் அரசு மருத்தவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற காயத்தகவலை பெற்று அங்கு சென்று சிகிச்சையிலிருந்த அ.சா.1னிடம் புகார்வாக்குமூலம் பெற்று மேற்கு காவல் நிலைய குற்ற எண் 34/2020, சட்டப்பிரிவுகள் 294(b), 323,506(2) இதச மற்றும் பிரிவு 4 TNPWH Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **(அ.சா. 1 கொடுத்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2, முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. மேற்படி வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார்.

அவை முறையே **அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 ஆக** குறியீடு செய்யப்படுறிது. பின்னிட்டு சாட்சிகள் 1 முதல் 7வரை ஆகியோர்களை விசாரணை செய்து தனிதனியே வாக்குமூலம் பதிவு செய்தார். 1ம் எதிரி சரண்ராஜ் என்பவரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்துள்ளார். 2ம் எதிரி குருமூர்த்தி முன்ஜாமின் பெற்ற காரணத்தினால் அவர்களை கைது செய்யவில்லை.

அ.சா1ற்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றுள்ளார் (**அந்த விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.6ஆக குறியீடு செய்யப்படுகிறது**). எதிரிகளுக்கு எதிராக விசாரணையை முடித்து குற்ற இறுதியறிக்கையை சமர்பித்துள்ளேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

நான் சொல்லும் நாள் நேரம் இடத்தில் புகார் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றாலும், சம்பவயிடம் செல்லவில்லை என்றாலும், சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றாலும், எதிரிகளை கைது செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. நான் சரிவர விசாரிக்காமல் எதிரிகள் மீது தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.
**மறு விசாரணை:** இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd/–P.Rangeswari.
Judicial Magistrate No.I,
Kumbakonam.